தலைப்பு 239 - வெளிநாட்டு வளங்கள் திணைக்களம் - 2024

1. நிதிக்கூற்றுக்கள்

1.1 அபிப்பிராயம்

தலைப்பு 239 - வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்தின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுக்கு உரிய தகவல்களையும் உள்ளடக்கி நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்களுடன் கூடிய 2024 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2025 மே 30 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் திணைக்களத்திற்குரிய விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2025 செப்டம்பர் 09 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

2024 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்களில், நிதி நிலைமை, நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல், நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்பு 1 இல் குறிப்பிடப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கான அடிப்படைக்கு இணங்க அனைத்து பொருண்மையானவை தொடர்பிலும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.3 விடயமொன்றை வலியுறுத்தல் - நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கான அடிப்படை

இந்த நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் அடிப்படையை விபரிக்கும் நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்பு 1 தொடர்பில் கவனம் செலுத்துமாறு கோருகின்றேன். நிதிக்கூற்றுக்கள் அரசின் நிதிப்பிரமாணம் 150 மற்றும் 151 மற்றும் 2025 பெப்ரவரி 21 ஆந் திகதி திருத்தப்பட்ட 2024 திசெம்பர் 16 ஆந் திகதிய அரச கணக்குகள் வழிகாட்டி இலக்கம் 06/2024 இன் பிரகாரம் வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்தினதும், பொதுத் திறைசேரியினதும் மற்றும் பாராளுமன்றத்தினதும் தேவைப்பாட்டுக்காக தயாரிக்கப்பட்டுள்ளது. அதனால், இந்த நிதிக்கூற்றுக்கள் வேறு நோக்கங்களுக்கு பொருத்தமற்றதாக இருக்கக்கூடும். எனது அறிக்கை வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்தினதும், பொதுத் திறைசேரியினதும் மற்றும் இலங்கை

பாராளுமன்றத்தினதும் பயன்பாட்டினை மாத்திரம் நோக்கமாக கொண்டுள்ளது. இந்த விடயம் தொடர்பில் எனது அபிப்பிராயத்தில் எந்த மாற்றமும் ஏற்படாது.

1.4 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு

அரசின் நிதிப்பிரமாணம் 150 மற்றும் 151 மற்றும் 2025 பெப்ரவரி 21 ஆந் திகதி திருத்தப்பட்ட 2024 திசெம்பர் 16 ஆந் திகதிய அரச கணக்குகள் வழிகாட்டி இலக்கம் 06/2024 இன் பிரகாரம் அனைத்து பொருண்மையானவை தொடர்பிலும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று அற்ற நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் திணைக்களத்தால் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்று தயாரிக்கப்பட்டு பேணிச் செல்லப்படுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுறுதிப்படுத்த வேண்டியதுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று மேற்கொள்ளப்பட்டு அதற்கமைய அம்முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

1.5 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றை பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்ககூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் எடுக்கப்படும் பொருளாதார தீர்மானங்கள் மீதான தாக்கத்தின் அடிப்படையில் தங்கியிருக்கும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக என்னால் கணக்காய்வின் போது துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறைசார் பின்னணியுடன் செயற்படுத்தப்பட்டது. என்னால் மேலும்,

- வெளியிடப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கு அடிப்படையொன்றை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று உருவாகும் ஆபத்தினை இனங்காணுதல் மற்றும் மதிப்பீட்டு செய்தல் என்பவற்றிற்காக சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடப்பட்டு செயற்படுத்தப்பட்டன. தவறுதலாக காண்பிப்பதன் காரணமாக இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கத்தினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு,

தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல், தவறாக காண்பித்தல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் போன்ற காரணங்களால் ஆகும்.

- உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் எண்ணத்தில் அல்லாமல் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பாக தெளிவொன்று பெற்றுக் கொள்ளப்பட்டது.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலும் மதிப்பீடு செய்யப்பட்டது.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு தெரியப்படுத்தியுள்ளேன்.

2. ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்களுடன் நேரொத்ததாக உள்ளது எனவும்,

(ஆ) முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் வழங்கப்பட்ட பரிந்துரைகள் அமுல்படுத்தப்பட்டிருந்தது.

3. நிதி மீளாய்வு

3.1 செலவின முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
(அ)	ஆரம்ப செலவின மதிப்பீடு மற்றும் திருத்தப்பட்ட செலவின மதிப்பீட்டை ஒப்பீடு செய்த போது 06	ஆரம்ப செலவின மதிப்பீடு திருத்துவதற்காக சகல உத்தியோகத்தர்களுக்காகவும் ரூபா 5,000 மாதாந்தப் படி மற்றும் நிறைவேற்று உத்தியோகத்தர்களுக்காக ரூப 25,000 படி செலுத்த வேண்டி ஏற்பட்டிருந்தமை, கோரப்பட்ட நிதி ஏற்பாட்டின் அளவு ஒதுக்கப்படாதிருந்த	நிதிப் பிரமாணம் 50 இன் பிரகாரம் வருடாந்த செலவின மதிப்பீடு

	செலவின விடயங்களுக்குரிய முரண்கள் 87 சதவீதம் குறைவடைந் ததில் இருந்து 286 சதவீதம் அதிகரிப்பு வரையிலான வீச்சில் வேறுபாடுகள் காணப்பட்டது.	போதும் வாகனங்களின் தேவைகளில் மேற்கொள்ள வேண்டியிருந்த மீண்டெழும் வகை யான சில பழுதுபார்த் தல்கள் மேற்கொள்ள வேண்டி இருந்தமை, அவசரமாக ஏற்பட்டிருந்த செயலிழந்த நிலையின் காரணமாக இயந்திரங்கள் மற்றும் இயந்திர உபகரணங்கள் பராமரிப்புச் செலவினம் உயர்வடைந்தமை, சுகாதார பொருட்கள் மற்றும் உரிய உபகணரங்கள் திணைக்களத் தின் மூலம் வழங்க வேண்டி ஏற்பட்டமை, செயற்பாடுக் குத்தகை திட்ட முறையின் கீழ் உடன்படிக்கை செய்யப்பட்ட வாகனங்களுக்காக 2023 ஆம் ஆண்டினை விட உயர்ந்த பெறுமதியொன்று செலுத்த வேண்டி ஏற்பட்டமை பலநோக்கு நிழற்படப் பிரதி இயந்திரம் இரண்டு மற்றும் 05 கணனிகள் பயன்பாட்டில் இருந்து அகற்றப்பட்டமையால் சேவை உடன்படிக்கைகளில் கைச்சாத் திடாமை, கூட்டங்களுக்கான உபசரிப்புகளுக்குரிய செலவினத்தை செய்ய வேண்டி ஏற்பட்டமை, சம்மாதம் பங்களிப்பு பணம் செலுத்தும் போது அந்நியச் செலாவணி விகிதம் குறைவடைந்தமை போன்ற விடயங்கள் காரணமாக இருந்தது.	சரியாகவும் பெருத்தமான வும் தயாரிக்கப்பட ல் வேண்டும்.
(ஆ)	இலக்கம் 239-1-1-0-2103 என்ற மூலதன செலவின விடயத்திற் காக ஒதுக்கப்பட்ட தேறிய நிதி ஏற்பாடான ரூபா 4,000,000 மீளாய்வாண்டின் போதும் செலவிடப்படாமல் முழுமையாக சேமிக்கப்பட்டி ருந்தது.	மூலதன செலவினங்கள் வரையறுத் ததன் அடிப்படையில் இயந்திரம் மற்றும் இயந்திர உபகரணங்கள் கொள்வனவு செய்தல் வரையறுக்கப்பட்டமை.	மேற்படி
(இ)	12 மீண்டெழும் செலவின விடயங்கள் மற்றும் 05 மூலதன செலவின விடயங்க ளுக்காக மிகை நிதி ஏற்பாடு வழங்கப்பட்டதன் காரணமாக ஆண்டில் பயன்படுத்திய பின்னர் ரூபா 615,183,036 சேமிப்பு	நிதி ஏற்பாடு சேமிப்பிற்காக பதவி நிலை உத்தியோகத்தர்களை உள்ளடக்கி உத்தியோகத் தர்கள் சிலருக்கு இடமாற்றலாகிச் சென்றமை, சம்பளமற்ற வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு விடுமுறையைப் பெற்றுக்கொண்டதன் காரணமாக அவர்களின் சம்பளங்களுக்காக ஒதக்கப்பட்ட நிதி ஏற்பாடு சேமிக்கப்பட்டமை, மதிப்பீடுகளில் அளவிற்கு மேலதிக வேலைகள் அறிக்கையி டாமை, அநேகமான கூட்டங்கள் இணையவழி ஊடாக நடாத்தப்பட்டமை, உள்நாட்டு நிதியத்தைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்பட்ட வெளிநாட்டு பிரயாணச் செலவினங்கள் வரையறுக்கப்பட்டமை மற்றும் மதிப்பீடு	மேற்படி

காணப்பட்டதுடன் அது தேறிய நிதி ஏற்பாட்டில் 6 சதவீதம் முதல் 98 சதவீதத் திற்கிடையிலான வீச்சிலான சதவீதத்தைக் கொண்டிருந்த தது.	தயாரிக்கின்ற சந்தர்ப்பத்தை விட அந்நியச் செலாவணி விகிதம் வீழ்ச்சியடைந் ததன் அடிப்படையில் வெளிநாட்டுப் பிரயாணங்க ளுக்காக செலுத்த வேண்டிய டொலர் அளவிற்குரிய ரூபாய் பெறுமதி குறைவடைந் தமை, காகிதாதிகளின் விலைகள் குறைவடைந் தமை, திணைக்களத்திற்கு புதிய சேவர் முறைமையொன்றைப் பெற்றுக்கொள் வதற்காக நிதி ஏற்பாடு ஒதுக்கப்பட்ட போதும் அரச கடன் முகாமைத்துவ மென்பொருள் முறைமை ஸ்தாபித்தல் தொடர்பாகவும், அதற்காக தேவையான சேவர் மென்பொருளை கொள்வனவு செய்த பின்னர் இந்த நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு உயர் முகாமைத் துவம் தீர்மானித்தமையால் காணப் பட்ட சேவர் முறைமை இன்னும் சில வருடகாலத்திற்காக நீடிக்கும் அடிப்படையில் ஒதுக்கப்பட்ட நிதி ஏற்பாடு சேமிக்கப்பட்டமை, திட்ட மிடப்பட்ட ஏனைய மென்பொருள் ஸ்தாபித்தலும் சேவர் முறைமை கொள்வனவு செயய்வதன் அடிப்படையில் தீர்மானம் எடுக்கப் பட்டமையால் அதற்குரிய மென் பொருள் கொள்வனவு செய்தலும் நிறுத்தப்பட்டமையால் நிதி ஏற்பாடு சேமிக்கப்பட்டமை, சொத்துக்கள் முகாமைத்துவம் மென்பொருளின் Trail Version காணப்பட்ட சில தேவைகள் பூர்த்தி செய்யப்பட்டமை சேவை உடன்படிக்கைகளுக்கு கைச்சாத்திட்டு ஒரு வருடத்திற்கு காலம் தாழ்த்தப்பட்டமை போன்ற விடயங்கள் காரணமாக இருந்தது.

3.2 பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளுக்கு உட்படல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
(அ)	மீளாய்வாண்டின் பொறுப்புக்கள் தொடர்பான கூற்றின் பிரகாரம் 2024 திசம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 574,821 பொறுப்புக்க ளுக்கு கைச்சாத்திட உடன் பட்டிருந்த போதிலும் திறைசேரி அச்சிடல் SA 92 இன் பிரகாரம் CIGAS முறைமையில் உள்ளடக்கப் பட்டிருக்கவில்லை.	தவறுதலால் சிகாஸ் முறைமையில் உள்ளடக்குவதற்கு முடியாதிருந்தது. எதிர்காலத்தில் உரிய தரவுகளை உள்ளடக்கும் போது மீண்டும் பரிசோதனைகள் மேற்கொள்கின்ற முறையில் வேலை கையளிக்கப்பட்டு இவ்வாறான வழுக்கள் ஏற்படாமல் இருப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.	சகல பொறுப் புக்களும் CIGAS முறைமையில் உள்ளடக்குத ல் வேண்டும்.

(ஆ)	இலக்கம் 239-1-1-0-1002 மற்றும் 239-1-1-0-1101 என்ற செலவின விடயங்களின் கீழ் எந்தவொரு பொறுப்பும் பொறுப் புக்கள் தொடர்பான கூற்றில் உள்ளடக்கப்படா திருந்ததுடன் அந்த செலவின விடயத்தின் கீழ் ஆண்டிற்குரிய முறையே ரூபா 923,943 மற்றும் ரூபா 25,200 தொகை ஆக கூட்டு மொத்தமாக ரூபா 949,143 தொகை 2025 சனவரி மாதத்தின் போது செலுத்தப்பட்டிருந்தது.	எதிர்காலத்தில் சரி செய்வதற்கு குறிப்பிடப்பட்டுள்ளது.	சகல பொறுப்புக்களுும் நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்குதல் வேண்டும்.
(இ)	நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்ட நிதிப்பிரமாணம் 94(2) மற்றும் (3) இன் பிரகாரம் பொறுப்புக்களுக்கு உடன் பட்ட கடப்பாடுகள் கூற்றில் நிதிப் பிரமாணம் 94(2) இல் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் கைச்சாத்திடக் கூடிய ஆகக் கூடிய கடப்பாட்டு எல்லையும் காண்பிக்கப் பட்டிருக்கவில்லை.	கைச்சாத்திடக்கூடிய ஆகக்கூடிய கடப்பாட்டு எல்லை ஒன்றினால் அதில் உள்ளடக்கப்பட வில்லை. எதிர்காலத்தில் அந்த தரவுகளை உள்ளடக்கும் போது மீண்டும் பரிசோதனை மேற்கொள்கின்ற வகையில் வேலை பகிர்ந்தளித்து இவ்வாறான வழுக்கள் ஏற்படாமல் இருப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.	முழுமையான தகவல்களும் நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்குதல் வேண்டும்.

4. செயற்பாட்டு மீளாய்வு

4.1 எதிர்பார்த்த பூர்த்தி மட்டம் அடையப் பெறாமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
(அ)	வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்தால் பயன்படுத்தப்படுகின்ற CS-DRMS கடன் முகாமைத்துவ முறை கடன் சேவையிடலை எதிர்வு கூறி உள்ளடக்கிய பணிகளுக்காக அறிமுகப்ப டுத்தப்பட்ட முறைமை யொன்றாக இருந்ததுடன் அதன் பிரகாரம் கடன் தொடர்பான தகவல்கள் ITMIS இற்கு இணையவழி முறைமையில் அனுப்புதல்	புதிய கடன் முகாமைத்துவத் தரவு முறைமையொன்றைக் கொள்வனவு செய்யும் பெறுகை நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. கேள்வி ஆவணங்கள்	கொள்வனவு செய்வதற்கு உத்தேசிக் கப்பட்ட புதிய முறைமையில் இருந்து இந்தப் பிரச்சினைக

தொடரபாக உரிய நிறுவனத்துடன் கலந்துரையாடி கவனத்திற் கொள்ளக்கூடிய விடயங்கள் மேற்கொள்ள வேண்டியிருந்த போதிலும் தொழில்நுட்ப பிரச்சினைகளின் காரணமாக தற்போது CS-DRMS முறைமை ITMIS உடன் தொடர்புபடுத்துதல் கஸ்டமான பணியாக இருந்ததாகவும் கணக்காய்விற்கு அறிவிக்கப் பட்டிருந்தது. கடன் முகாமைத்துவ நடவடிக்கைகளுடன் காசுப் பாய்ச்சல் முகாமைத்துவம் மற்றும் கடன் கொடுக்கல் வாங்கல்களை கணக்கீடு செய்யும் வசதிகளுடன் மற்றும் / அல்லது CS-DRMS முறைமையில் ITMIS உமுறைமைக்கு தேவையான தரவுகளைப் பரிமாற்றம் செய்யக் கூடிய வசதிகளுடன் ஆன கடன் முகாமைத்துவ முறைமை யொன்றை அறிமுகப்படுத்து வதற்கு திணைக்களம் 2025 மே 20 ஆந் திகதியும் செயற்பட்டிருக்கவில்லை.	தயாரித்து தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.	ளைத் தவிர்த்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

(ஆ) கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் 2024 ஆம் ஆண்டிற்குரிய எதிர்பார்க்கப்பட்ட மதிப்பீடு மற்றும் உள்ளபடியாக எதிர்பார்க்கப்பட்ட பெறுமதி பின்வருமாறு.

அபிவிருத்தி தரப்பினர்	எதிர்பார்க்கப் பட்ட மதிப்பீட்டு மானியத்தை உள்ளடக்கி 2024(ஐ.அ.டொலர். மில்லியன்)	உள்ளபடியான எதிர்பார்க்கப்பட்ட பெறுமதி மானியத்தை உள்ளடக்கி 2024 (ஐ.அ.டொலர் மில்லியன்)	முரண்கள் (ஐ.அ.டொலர் மில்லியன்)	முரண்கள் எதிர்பார்க்கப்பட்ட மதிப்பீட்டின் சதவீதமாக (சதவீதம்)
உலக வங்கி	397	564.9	167.9	42
ஆசிய அபிவிருத்தி வங்கி	600	862.1	262.1	44
சீனா	281	51.9	(229.1)	(82)
யப்பான்	59	37.3	(21.7)	(37)
கொரியா	39	4.3	(34.7)	(89)
மத்திய கிழக்கு ஆசிய நாடுகள் மற்றும் ஒபெக் நிதியம்	83	39.3	(43.7)	(53)
தெற்கு ஆசிய நாடுகள்	124	-	(124)	(100)
ரஸ்யா, அவுஸ்திரேலியா	122	7.94	(114.06)	(93)

மற்றும் மேற்கத்திய நாடுகள் IFDA	48	16.4	(31.6)	(66)
உள்ளடக்கி ஐக்கிய நாடுகள் முகவர் நிறுவனங்கள்				
சர்வதேச நிதிசார் நிதியங்கள்	0	334	334	100
மொத்தம்	-------	--------	-------	
	1,753	**1,918**	**165.1**	
	===	====	===	

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i)	2024 ஆம் ஆண்டில் எதிர்பார்க்கப்பட்ட மொத்தப் பெறுமதி ஐ.அ.டொலர் 1,753 மில்லியனாக இருந்த போதும் உள்ளபடியான மீள் மதிப்பீட்டுப் பெறுமதி ஐ.அ.டொலர் 1,918 மில்லியன் ஆனதன் காரணமாக உள்ளபடியான எதிர்பார்க்கப்பட்ட மதிப்பீட்டுப் பெறுமதி, எதிர்பார்க்கப்பட்ட மதிப்பீட்டை விட ஐ.அ.டொலர் 165.1 மில்லியனால் அதாவது 9 சதவீத அளவு அதிகரித்திருந்தது.	ஒவ்வொரு வருடமும் உரிய எதிர்பார்க்கப்பட்ட மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு முன்னைய ஆண்டில் இரண்டாவது காலாண்டில் இரண்டாவது காலாண்டிலேயே தயாரிக்கப்படுகின்றது. அதனை மதிப்பீடு செய்யும் போது உரிய ஒவ்வொரு அபிவிருத்தி தரப்பினருக்கும் உரிய செயற்திட்டத்திற் காக எதிர்வரும் ஆண்டில் எதிர்பார்க்கப்பட்ட எதிர்பார்க்கப்பட்ட மதிப்பீடு தொடர்பாக கவனத் தற்கொள்ளப்படுகின்றது. எனினும் ஆண்டிற்குரிய உள்ளபடியான மதிப்பீடு, செயற் திட்டத்தை அமுல் படுத்துகின்ற போது ஏற்படுகின்ற விலை தளம்பல் களின் அடிப்படையில் செயற்திட்டக் கிரயம் மாற்றமடைகின்றமை மற்றும் அந்நியச் செலாவணி விகிதம்	முறையான பிரகாரம் திட்டமிடப் பட்டு வெளி நாட்டுக் கடன் நிதி யீட்டம் மேற் கொள்ளப் படல் வேண்டும்.

		மாற்றமடைதல் போன்ற காரணங்களினால் வேறுபடுகின்றது. அவ்வாறே பல் வேறு சந்தர்ப்பங்களின் போது செயல் திட்டத்தை அமுல்படுத்தலின் வேகத்தின் அடிப்படையிலும் உள்ளபடியான மீள் மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதியினை விட வேறுபடுகின் றது.	
(ii)	உலக வங்கி மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கி என்ற தரப்பினர்களிடமிருந்து பெறப்பட்ட கடனின் உள்ளபடியான தேறிய பெறுமதியை மீள் மதிப்பீட்டுப் பெறுமதியுடன் இணக்கம் செய்யும் போது முறையே 42 மற்றும் 44 சதவீதத்தால் அதிகரித்திருந்தது.	உலக வங்கியின் மூலம் அமுல்படுத் தப்படுகின்ற செயற் திட்டங்களுக்காக 2024 ஆம் ஆண்டில் எதிர்பார்க்கப்பட்ட மதிப்பீடுகள் 2024 ஆம் ஆண்டிற்காக எதிர்வுகூறப்பட்ட வரவு செலவுத்திட்ட மதிப்பீட்டை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட்டிருந்தது. அது அண்ணளவாக டொலர் 397 மில்லியன் ஆகும். சர்வதேச நாணய நிதியம் விரிவாக்கல் வசதிகளுக்கு இணையாக உலக வங்கியின் மூலம் பாதீட்டு நிலுவை தீர்த்து வைப்பதற்காக அண்ணளவாக டொலர் 200 மில்லியன் தொகை 2024 ஆம் ஆண்டில் வழங்கப்பட்டிருந்தது. அது எதிர்வு கூறலுக்காக உள்ளடக்கப்பட வில்லை. அவ்வாறே ஆசிய அபிவிருத்தி வங்கி இலகு நிதி	மேற்படி

		வளத் தொகுதியொன்றில் மேலும் வழங்க வேண்டியிருந்த நிதி ஏற்பாடு காணப்பட் டதன் அடிப்படையிலும், இலங்கையிலும் பாதீட்டு உதவி நிதி ஏற்பாடு தேவை காணப்பட்ட மையால் பாதீட்டு உதவி நிதி ஏற்பாடு பெறப்பட்டி ருந்தது.	
(iii)	சீனா, ஜப்பான், கொரியா, மத்திய கிழக்கு நாடுகள், IFAD உள்ளடக்கிய ஐக்கிய நாடுகளின் முகவர் நிறுவனங்கள் மற்றும் ரஷ்யா, அவுஸ்திரேலியா மற்றும் மேற்கத்திய நாடுகளிலிருந்து பெற்றுக்கொள்வதற்கு எதிர்பார்க்கப்பட்ட கடன் முறையே 82, 37, 89, 53, 66 மற்றும் 93 சதவீதத்தால் குறைவடைந்திருந்தது.	இலங்கை அரசாங்கத்தினால் கடன் தவணைப் பணம் செலுத்துதல் தற்காலிகமாக கைவிடப்பட்டமை யால் சீனா, ஜப்பான், கொரியா, ரஷ்யா, மற்றும் அவுஸ்திரேலியா என்ற நாடுகள் கடன் மீளளிப்பை நிறுத்தியிருந்ததுடன் மதிப்பீடு தயாரிக்கும் போது 2024 ஆம் ஆண்டில் மீண்டும் தேறக் கூடியவைகள் ஆரம்பிக்கப்படுகின்ற எண்ணக்கருவின் அடிப்படையில் ஸ்தாபிக்கப்பட்டு மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.	மேற்படி
(iv)	மீளாய்வாண்டின் போது தெற்காசிய நாடுகளில் இருந்து கடன் பெற்றுக்கொள்வதற்கு மதிப்பீடு செய்யப்பட்ட போதும் ஆண்டின் இறுதி வரையிலும் கடன் பெற்றுக்கொள்ளப்பட வில்லை.	2024 ஆம் ஆண்டில் காணப்பட்ட பொருளாதார வீழ்ச்சி மற்றும் அரசாங்கத்தின் கடன் கொள்கையின் அடிப்படையில் மற்றும் கடன் மீள் கட்டமைப்பு செயற்பாடுகள் முடிவடையாதிருந்தை மயால் கடன் பெற்றுக்கொள்ளப்பட வில்லை.	மேற்படி

<table>
<tr>
<td>(v)</td>
<td>மீளாய்வாண்டில் மீள் மதிப்பீட்டின் பிரகாரம் சர்வதேச நிதியத்தில் இருந்து (IMF) எந்தவொரு மீள் மதிப்பீட்டுத் தொகையும் எதிர்பார்க் கப்படாதிருந்தபோதும் ஐ.அ. டொலர் 334 எதிர்பார்க்கப்பட்டிருந்தது.</td>
<td>சர்வதேச நாணய நிதியக் கடன் பெற்றுக்கொள்ளல், நிதியமைச்சு மற்றும் சர்வதேச நாணய நிதியத்துடன் ஏற்படுத்தப்பட்ட இணக்கப்பாட்டின் அடிப்படையில் தீர்மானம் எடுக்கப்பட்டது. வெளி நாட்டு வழங்கல் திணைக்களத்தின் மூலம் மேற்கொள்ளப்படுகின்ற அபிவிருத்தி செயற்திட்டங்களுக்கான எதிர்பார்க்கப்பட்ட மதிப்பீடு செய்யும் போது அந்தப் பெறுமதி உள்ளடக்கப்படவில்லை.</td>
<td>சர்வதேச நாணய நிதியத்துடன் உடன்பட்ட விரிவான கடன் வசதிகளின் பிரகாரம் பெறக் கூடிய நிதியை எதிர்வுகூறல் வேண்டும்.</td>
</tr>
<tr>
<td>(இ)</td>
<td>அரசாங்கத்தின் நிதிக் கூற்றுக்களில் தெளிவுபடுத்தும் கூற்றின் 02 (Explanatory Notes) இன் கீழ் 2024 திசம்பர் 31 இல் உள்ளவாறு கணக்கீடு செய்யப்படாத வெளிநாட்டுக் கடன் பெறுமதி ரூபா 1,070 மில்லியனாக காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் திறைசேரி செயற் பாடுகள் திணைக்களத்தால் மீளாய்வாண்டின் போது சமர்ப்பிக்கப்பட்ட தவகல்களின் பிரகாரம் அவற்றின் தேறக் கூடிய காலத்தில் பின்வரும் வேறுபாடுகள் அவதானிக்கப்பட்டது.
<table>
<tr><td>கடன் இலக்கம்</td><td>நிதிக் கூற்றின் பிரகாரம் எதிர்பார்க்கப்பட்ட காலம்</td><td>திறைசேரி செயற்பாடுகள் திணைக்களத்தின் தகவல்களின் பிரகாரம் எதிர்பார்க்கப்பட்ட காலம்</td></tr>
<tr><td>2012017</td><td>2020 திசம்பர்</td><td>2024</td></tr>
<tr><td>2012025</td><td>2023 நவம்பர்</td><td>2024</td></tr>
<tr><td>2016035</td><td>2022 செப்டெம்பர்</td><td>2022 செப்டெம்பர் 2023 மார்ச் மற்றும் செப்டெம்பர்</td></tr>
</table>
</td>
<td>கணக்காய்வு அவதானிப்புக் களுடன் இணங்குகின்றோம்.</td>
<td>அரசாங்கத்திடம் கடன் பெற்றுக் கொள்ளல் கடன் சேவைகளை கணக்கீடு செய்தல் முறையான பிரகாரம் மேற் கொள்ளல் வேண்டும்.</td>
</tr>
</table>

திறைசேரி செயற்பாடுகள் திணைக்கத்தால் 2020 முதல் 2023 ஆம் ஆண்டு வரை கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் மேலே காண்பிக்கப்பட்டுள்ள கடன் எதிர்பார்க்கப்பட்டிருந்ததாக காண்பிக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே கடன் கொடுக்கல் வாங்கல்களுக்குரிய வெளிநாட்டு வழங்கள் திணைக்களத்துடன் ஒன்றுக்கொன்று பரஸ்பர தகவல்கள் வேறுபாடான தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டதுடன் அதன் பிரகாரம் உரிய பொறுப்புக்கள் கையளித்த திணைக்களத்தால் வெளிநாட்டுக் கடன் மீள் மதிப்பீடு தொடர்பகாக முறையான மற்றும் நாளதுவரையான தகவல்கள் பேணிச் செல்லப்படாதிருந்தமை வெளிப்படுத்தப்பட்டது. மேலும் வெளிநாட்டுக் கடன் அறிக்கையிடுகின்ற முறைமையில் Stock and Flow Report No.1 அறிக்கையின் பிரகாரம் மேற் கூறப்பட்ட கடன் தொடர்பாக முறை யான மற்றும் நாளதுவரையான தகவல்கள் பேணிச்செல்லப்பட்டிருக்கவில்லை. அதன் பிரகாரம் மேற்கூறப்பட்ட கடன் கொடுக்கல் வாங்கல்களுக்கு மேலதிகமாக முறையான அறிக்கையொன்று இல்லாமல் ஏனைய வெளிநாட்டு கடன் காணப்பட்டமை உயர்ந்த ஆபத்துடனாக இருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ஈ) இலங்கை அரசாங்கத்திற்காக வெளிநாட்டுக் கடன் தொகுதியொன்றைப் பேணிச்செல்லல் மற்றும் அவற்றை முறையாக முகாமைத்துவம் செய்வது தொடர்பில் தேவையான அடிப்படைத் தரவு முறைமையொன்றை பேணிச் செல்லல் திணைக்களத்தின் அடிப்ப டைப் பணிப்பொறுப்பாகும். அதற்காக CS-DRMS கடன் முகாமைத்துவ முறைமை பயன்படுத் தப்படுகின்றது. எனினும் திணைக் களத்தால் பேணிச்செல்லப்படுகின்ற தகவல் முறைமையின் மூலம் முழுமைப்படுத்தப்பட்ட, நாளதுவரையாக் கப்பட்ட தகவல்கள் காணப்படாத சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன. அதன் பிரகாரம்

(i)	மேற்கூறப்பட்ட முறைமையில் பெறப்பட்ட Stock and Flow Report No.1 அறிக்கையின் பிரகாரம் கடன் உடன்படிக்கைகள் 18 இற்குரிய 2023 திசம்பர் 31 இல் உள்ளவாறு காணப் பட்ட மீதிக்கும் மீளாய்வாண்டின் ஆரம்ப மீதிக்கும் இடையே தேறிய கூட்டுத்தொகை ரூபா 3,711 மில்லியன் வேறுபாடு அவதானிக்கப்பட்டது.	கடன் மீள் கட்டமைப்பின் செயற்பாடுகளின் கீழ் விசாரணை செய்த போது வெளிப்படுத்தப்பட்ட முன்னைய ஆண்டுகளில் இடம் பெற்ற கொடுக்கல் வாங்கல்கள் மீளாய்வாண்டின் போது வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்திற்கு அனுப்புதல், தவறுதலாக நாணாய மாற்று அதிகப் பெறுமதியில் குறிப்பிடப்பட்ட தவறை சரி செய்தல் மற்றும் தாமதம டைந்து கிடைத்த மீள் மதிப்பீட்டுப் பெறுமதியைக் குறிப்பிடல் போன்ற விடயங் கள் காரணமாக இருந்தது.	அரசாங்கம் கடன் பெறுதல், கடன் சேவை யிடலை அறிக்கையிடல் மற்றும் கணக்கீடு செய்தல் முறையான பிரகாரம் மேற் கொள்ளப்படல் வேண்டும்.
(ii)	கடந்த ஆண்டில் ஏற்பட்ட வெளிநாட்டுக் கடன் எதிர்பார்க்கப்பட்டவைகளில் மீளாய்வாண்டின் போது ஏற்பட்டதாக முறைமையில் குறிப்பிட்டதன் காரணமாக அரசாங்கத்தின் நிதிக் கூற்றுக்களில் எதிர்பார்க்கப்பட்டவைகளுக்கிடையே பின்வரும் வேறுபாடுகள் அவதானிக்கப்பட்டன.	மேற்படி	மேற்படி

கடன் இலக்கம்	அரசாங்கத் தின் கடன் நிதிக்கூற்றி ன் பிரகாரம் மீதி	தகவல் முமைமையின் பிரகாரம் எதிர்பார்க்கப்ப ட்டவைகள்	வேறுபாடு
2012024	USD 947,057	USD 709,147	USD 237,910
2019019	USD 28,717,515	USD 24,938,700	USD 3,778,815
2019043	SAR 47,320,932	SAR 47,284,890	SAR 36,042
2015021	EUR 28,227	இல்லை	EUR 28,227
2012025	SAR 570,876	SAR 272,171	SAR 298,705

(iii)	வெளிநாட்டுக் கடன் வழங்குநர்களின் அறிக்கை மற்றும் தகவல் முறைமையின் அறிக்கைக்கிடையே கவனத்திற்கொள்ளக்கூடிய வேறுபாடுகள் காணப்படுகின்றமை அவதானிக் கப்பட்டது. உதாரணமாக வழங்கு நரின் கடன் மீதியை உறுதிப்படுத்து தல் மற்றும் முறைமையின் அறிக்கையில் உள்ள கடன் மீதிகளுக்கிடையே வேறுபாடுகளின் கரணமாக கடன் இலக்கம் 1990009 இற்குரிய SDR 2,064 அதாவது ரூபா 787,553 அதிகரித்தும் கடன் இலக்கம் 2024001 இற்குரிய SDR 230,057 அதாவது ரூபா 87 மில்லியன் குறைத்தும் அரசாங்கத்தின் நிதிக் கூற்றுக்களில் அறிக்கையிடப்பட்டிருந்தது.	பல்வேறு மேற்படி நாணயமாற்றுக் குறிப்புக்களில் இடப்பட்டுள்ள தகவல்கள் இந்தக் கடனின் உண்மையான நாணயமாற்று முறைமையினால் (Dominated Currency) பரிமாற்றம் செய்யும் போது ஏற்பட்டிருந்த நாணயமாற்று வேறுபாட்டின் காரணமாக உரிய முரண்பாடுகள் ஏற்பட் டிருந்தது. அந்த முரண்பாடுகள் தற்போது சரிசெய்யப்பட்டுள்ளது. மேலும் 2024.12.31 இல் உள்ளவாறு உரிய 2025.01.31 ஆந் திகதி தாயரிக்கப்பட்ட Stock and Flow Report அறிக்கையில் 2024.12.20 இல் உள்ளவாறு மேற்கொள்ளப் பட்ட மீள வழங்கல் (Refund) முறைமையின் சரியான தன்மையை சரியாக நாளதுவரையாக்கப்பட் டுள்ளது. எனினும் உரிய கடன் கொடுத்தோரால் 2024.12.31 இற்குரிய அனுப்பப்பட்ட மீதியில் அந்த மீள் அனுப்பல் (Refund) அந்த மீதி பெறப்பட்ட சந்தர்ப் பத்தில் நாளதுவரையாக் கப்படாமல் கொண்டுவரப் பட்டிருந்தது.

(உ)	1994 ஏப்ரல் 20 ஆந் திகதிய இலக்கம் 30/94 என்ற அரச கணக்குகள் சுற்றறிக்கையின் பிரகாரம் வெளி நாட்டு உதவி தொடர்பாக சகல கொடுக்கல் வாங்கல்களும் பொதுத் திறைசேரியின் வெளிநாட்டு வழங்கல் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தால் மேற்கொள்ள வேண்டியிருந்தமை குறிப்பிடப்பட்ட போதும் தெரிவுப் பரிசோதனையின் அடிப்படையில் தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டில் பொதுத் திறைசேரிக்கு அறிவிக்காமல் 08 நிறுவனங்கள் கூட்டுமொத்தமாக ரூபா 1,047.6 மில்லியன் வெளிநாட்டு மானியத்தை நேரடியாக பெற்றிருந் தது. அதன் பிரகாரம் வெளிநாட்டு வழங்கல் திணைக்களத்திற்கு தெரியப்படுத்தாமல் பல்வேறு தரப்பினருக்கு வெளிநாட்டு மானியம் நேரடியாக பெற்றுக்கொள்ளும் சந்தர்ப்பம் காணப்படுகின்றமையும் அதன் காரணமாக வெளிநாட்டுதவி தொடர்பாக தேசிய ரீதியில் தயாரிக்கப்படுகின்ற தகவல்களின் முழுமையான தன்மை தொடர்பான பிரச்சினைகள் எழுந்தமை, உரிய ஒழுங்குபடுத்துதல் இன்றி வெளி நாட்டு மானியம் பெறப்பட்டமை மற்றும் பயன்படுத்தும் ஆபத்து காணப்பட்டமை, அரசாங்கத்தின் நிதிக் கூற்றுக்களில் பிழையான தகவல்கள் உள்ளடங்கியிருந்தமை, பிழையான தகவல்களை அடிப்படையாகக் கொண்டு அரசாங்கத்தின் கொள்கை ரீதியான தீர்மானம் எடுக்கும் ஆபத்துக்கள் ஏற்பட்டிருந்தமை போன்ற பாதகமான நிலைமை ஏற்படக்கூடியதாக இருந்தமை அவதானிக்கப்பட்டது.	1994.04.20 ஆம் திகதிய இலக்கம் 30/94 என்ற சுற்றறிக்கைகள் போன்று பல்வேறு சுற்றறிக்கைகள் மற்றும் ஆலோசனைகளின் மூலமும் சுட்டிக்காட்டப் பட்டுள்ள பிரகாரம் உரிய திட்டத்தின்படி வெளிநாட்டு வழங்கல் திணைக்களத்திற்கு அறிவித்து பெறப்படுகின்ற மானியங்கள் தொடர்பாக இந்த திணைக்களத்தால் உரிய பிரகாரம் பதிவுகள் மேற்கொள்ளப்படுகின்றது. ஏனைய நிறுவனங்களுக்கு மாத்திரம் அறிக்கையிடப்பட்ட மானியங்கள் தொடர்பாக அந்த சுற்றறிக்கை ஆலோசனை கோவை மற்றும் நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் சகல அமைச்சு செயலாளர்கள், திணைக்களத் தலைவர்கள், நியதிச்சட்ட நிறுவனங்களின் தலைவர்களின் பொறுப்பாகும்.	சுற்றறிக்கை ஆலோசனையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்ததுடன் உரிய நிறுவனங்கள் அது தொடர்பாக தொடர்ச்சியாக அறிவித்து பின்தொடர் நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும்.
(ஊ)	2019 சனவரி 01 ஆந் திகதி முதல் 2024 திசம்பர் 31 ஆம் திகதி வரை வெளிநாட்டு மானியங்களைப் பெற்றுக் கொள்வதற்காக பொதுத் திறைசேரியினால் வெளிநாட்டு மானிய செயற்திட்டங்கள் 03 உடன் கூட்டுப் பெறுமதி அமெரிக்க டொலர் 18 மில்லியன், ரூபா 290 மில்லியன் மற்றும் கொரியன் வொன் 14.3	இந்த 03 செயற்திட்டங்களுக்கான மானியங்கள் 2024 திசம்பர் 31 ஆந் திகதி வரையிலும் கிடைத்திருக்கவில்லை.	இலங்கை அரசாங்கத்தால் உடன்படிக்கைகளுக்கு கைச்சாத்திடப்பட்ட வெளி நாட்டு

பில்லியன் ஆன உடன்படிக்கைகளில் கைச்சாத்திடப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அதற்குரிய வெளிநாட்டு மானியம் கிடைத்தமை கணக்காய்விற்கு உறுதிப்படுத்தவில்லை.	மானியம் முழுமையாக பெற்று ஆகக் கூடிய வகையில் நோக்கங்களை ஈடுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

4.3 வெளிநாட்டுக் கடன் பெற்றுக்கொள்ளும் போது இலங்கை அரசாங்கத்தால் இறையாண்மை கோருதலை கைவிடுதல்.

கணக்காய்வு அவதானிப்புக்கள்	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
2023 திசம்பர் 31 இல் உள்ளவாறு இலங்கை அரசாங்கத்திற்குச் சொந்தமாக காணப்பட்ட செயற்திட்டக் கடன்கள் 755 இல் 549 செயற்திட்டக் கடன்களுக்குரிய வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்திற்கு கிடைத்த தகவல்களின் பிரகாரம் வெளிநாட்டு செயற்திட்டக் கடன் 78 இற்குரிய கடன் உடன்படிக்கைகளில் இறையாண்மை கோருதல் பல் வேறு வகையில் கைவிடல்)Waiver of Sovereign Immunity) பந்தியில் உள்ளடக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.	இந்தக் கடன் உடன்படிக்கைகள் கைச் சாத்திடுவதற்கு முன்னர் மத்திய வங்கி நாணய சபையினதும், அமைச்சரவை மற்றும் சட்டமா அதிபர் திணைக்களத்தின் அங்கீகாரமும் பெறப்பட்டுள்ளது. மேலும் சீனா அரசாங்கம் மற்றும் கடன் மானியதாரர்கள் சீன நிதி நிறுவனங்களுடன் கடன் மீள் கட்டமைப்பு கலந்துரையாடி பூர்த்தி செய்யப்படாதிருந்தமையால் இலங்கை அரசாங்கம் முகம் கொடுக்கின்ற ஆபத்துக்கள் தொடர்பாக இந்த சந்தர்ப்பத்தின் போது தீர்மானம் எடுக்க முடியாதிருந்தது. இலங்கை அரசாங்கத்தால் இரு தரப்பினர் கடன் மீள் கட்டமைப்பு செயற்பாடுகளின் போது தமது நிதி மற்றும் சட்ட ஆலோசனை யாளர்களாக Clifford Chance LLP மற்றும் Lazard Inc. என்ற சர்வதேச ஆலோசனையாளர்கள் நியமிக்கப்பட்டதுடன் அந்த ஆலோசனையாளர் களின் சரியான ஆலோசனையின் பிரகாரம் இலங்கை அரசங்கத்திற்கு உரிய கடன் உடன்படிக்கைகளில் குறிப்பிடப்பட்ட இறையாண்மை உரித்து கோருதல் பிரிவுகளுக்கும் இணங்க சீன அரசாங்கம் மற்றும் கடன் வழங்கும் சீன நிதி நிறுவனங்களுடன் தொடர்ந்தும் கடன் மீள் கட்டமைப்பு கலந்துரையாடல்கள் நடாத்தப்படுகின்றது.	எதிர்காலத்தில் வெளிநாட்டுக் கடன் பெற்றுக் கொள்ளும் போது உரிய கடன் உடன் படிக்கைகளில் உள்ளடக்கப் பட்டுள்ள இறை யாண்மை உரித்தைக் கைவிடல் பந்தி தொடர்பாக விஷேடமாக கவனம் செலுத்துதல் வேண்டும்.

4.4 வெளிநாட்டுக் கடன் மீள் கட்டமைத்தல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

கணக்காய்வு அவதானிப்புக்கள்	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
(அ) வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்தால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் சேனாவின் ஏற்றுமதி இறக்குமதி வங்கியிலிருந்து பெறப்பட்ட கடன் வகைகள் 52 மீளாய்வாண்டின் போது கடன் மீள் கட்டமைப்பு செயற்பாடுகளுக்கு அனுப்பப்பட்டிருந்தது அதில் அரசாங்கத்தின் நிதிக்கூற்றுக்களில் குறிப்பிடப்பட்ட இலக்கம் 26(ii) காண்பிக்கப்படுகின்ற செயற்திட்டக் கடன் 48 உம், செயற்திட்ட இலக்கம் 26(iii) இல் காண்பிக்கப்படுகின்ற வெளிநாட்டு நிதி காலரீதியிலான கடன் வசதிகளினால் 04 உம் உள்ளடங்கியிருந்தது. விபரம் கீழே காண்பிக்கப்படுகின்றது.		
(i) 44 செயற்திட்டங்களுக்குரிய வெளிநாட்டு கடன் தொகையில் கணிப்பிடப்பட்ட செலுத்தப்படாத கடன் வட்டி 2024 சனவரி 01 இல் உள்ளவாறு காணப்பட்ட கடன் மீதியில் சேர்க்கப்பட்டு மீள் கட்டமைக்கப்பட்ட கடன் மீதி கணிப்பிடப்பட்ட பின்னர் கடன் காலாவதியாகின்ற காலம் நீடிக்கப்பட்டு கடன் வட்டி விகிதமும் குறைக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் 33 செயற்திட்டங்களுக்குரிய கடன் மீதி ஐ.அ. டொலர் 236 மில்லியனாலும், 11 செயற்திட்டங்களுக்குரிய கடன் மீதி ரென்மின்பீ (யூஆன்) 275 மில்லியனாலும் அதிகரித்திருந்தது.	இந்த வேறுபாடுகள் உரிய ஒவ்வொரு கடன் மீள் கட்டமைப்பதற்கு முன்னர் மற்றும் அதன் பின்னர் ஏற்பட்ட வேறுபாடு களாகும். அதன் பிரகாரம் கணக்காய்வு அவதானிப்புடன் இணங்குகின்றோம்.	தகவல்கள் சமர்ப்பிக்கப் பட்டுள்ளது.
(ii) வெளிநாட்டு நாணயக் காலக் கடன் வசதிகள் 04 இற்குரிய கணிப்பீடு செய்யப்படாத கடன் வட்டி மற்றும் தண்ட வட்டி 2024 சனவரி 01 ஆந் திகதியில் காணப்பட்ட கடன் மீதியில் சேர்க்கப்பட்டு மீள்கட்டமைக்கப்பட்ட கடன் மீதி கணிப்பிடப்பட்டு பின்னர் காலாவதியாகின்ற காலம் நீடிக்கப்பட்டு கடன் வட்டி விகிதமும் குறைக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் 03 கடன் வசதிகளுக்குரிய கடன் மீதி ஐ.அ. டொலர் 258 மில்லியனாலும், ஒரு கடன் வசதிக்குரிய கடன் மீதி ரென்மின்பீ (யூஆன்) மில்லியன் 180 இனாலும் அதிகரித்திருந்தது.	மேற்படி	தகவல்கள் சமர்ப்பிக்கப் பட்டுள்ளது.

(iii)	2024 சனவரி 01 இல் உள்ளவாறு காணப்பட்ட யூரோ 4.5 மில்லியன் கடன் மீதிக்கு நிலுவைகாக இருந்த கடன் வட்டி மற்றம் தண்டப்பண வட்டியாக யூரோ 573,924 சேர்க்கப்பட்டு அதில் யூரோ 2.4 மில்லியன் அதாவது 48 சதவீதம் கடன் உரிமையாளரால் கைவிடப்பட்ட பின்னர் (Hair cut) மிகுதி யூரோ 2.6 மில்லியன் மீதி 2024 ஆம் ஆண்டின் போது செலுத்தி பூர்த்தி செய்யப்பட்டிருந்தது.	கணக்காய்வு அவதானிப்புக்களுடன் இணங்குகின்றோம்.	தகவல்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.
(iv)	03 செயற்திட்டங்களுக்குரிய ரென்மின்பீ (யூஆன்) 40 மில்லியன் கடன் மீதி எந்தவொரு மீள் கட்டமைப்பும் இன்றி 2024 ஆம் ஆண்டில் செலுத்தி பூர்த்தி செய்யப்பட்டிருந்தது.	கணக்காய்வு அவதானிபுக்களுடன் இணங்குகின்றோம்	தகவல்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.
(ஆ)	வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்தால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் அரசாங்கத்தின் நிதிக்கூற்றுக்களின் குறிப்பு இலக்கம் 26(iv) இல் காண்பிக்கப்பட்டுள்ள 2024 சனவரி 01 இல் உள்ளவாறு காணப்பட்ட ஐ.அ. டொலர் 12,550 மில்லியன் சர்வதேச இறையாண்மை பிணைமுறிக் கடன் 11, 2024 ஆம் ஆண்டில் மீள் கட்டமைக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் அந்த 11 பிணை முறிகளினதும் காலாவதியாகின்ற காலம் நீடிக்கப்பட்டு கடன் கொடுத்தோரால் பெயரளவில் கடன் கைவிடல் (Nominal Hair cut) வழங்கப்பட்டிருந்த துடன் ஆகக் குறைந்தது சராசரி வட்டி விகிதம் தீர்மானிக்கப்பட்டு புதிய சர்வதேச இறையாண்மை பிணை முறிகள் 08 ஆக மாற்றப்பட்டிருந்ததாக காண்பிக்கப்பட்டிருந்தது. மேலும் இந்த பிணைமுறிகளுக்குரிய 2023 திசம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவையாக இருந்த கடன் வட்டி ஐ.அ. டொலர் 3,750 மில்லியன் ஆக இருந்ததுடன் மீள் கட்டமைக்கப்பட்ட பின்னர் புதிய சர்வதேச இறையாண்மை பிணைமுறிகள் 08 இன் பெறுமதி ஐ.அ. டொலர் 10,647 மில்லியனாக இருந்தது.	நிதி திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சினால் விநியோகிக்கப்பட்ட 2024.12.18 ஆந் திகதிய ஊடக அறிவித்தலின் மூலம் இந்த தகவல்கள் பெற்றுக்கொள்ள முடியும்.	தகவல்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

5. மனிதவள முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

கணக்காய்வு அவதானிப்புக்கள்	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
2024 திசம்பர் 31 இல் உள்ளவாறு திணைக்களத்தன் சிரேஷ்ட நிலையில் 16 வெற்றி டங்களும், இரண்டாம் நிலையில் 11 வெற்றிடங் களும் உள்ளடக்கிய மொத்த வெற்றிடங்களின் எண்ணிக்கை 35 ஆகக் காணப்பட்டது. மேலும் வெளிநாட்டு வழங்கல் திணைக்களத்தின் சிரேஷ்ட நிலையில் 07 உத்தியோகத்தர்கள் மற்றும் இரண்டாம் நிலையில் 04 உத்தியோகத்தர்கள் 2022 யூன் 22 ஆந் திகதி அரச நிருவாக சுற்றறிக்கை 14/2022 ன் பிரகாரம் உள்நாட்டு / வெளிநாட்டு சம்பளமற்ற விடுமுறை பெற்று சென்றிருந்தனர். எனினும் பதவியணியினர் மீளாய்வு மேற்கொள்ளப்பட்டு வெற்றிடங்களை நிரப்புவதற்கோ அல்லது தேவையற்ற பதவிகளை நீக்குவதற்கோ மீளாய்வாண்டில் திணைக்களத்தால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்தின் விடயப் பரப்பில் பகுதி ஒன்றாக கடன் முகாமைத்துவ அலுவலகத்தைக் கையளிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டமையால் அந்த நடவடிக்கைகள் முடிவடைந்த பின்னர் திணைக்களத்தின் பதவி யணியினரை மீளாய்வு செய்து வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்தமையால் அந்த வெற்றிடங்க ளுக்காக உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டிருக்க வில்லை.	தேவையான பதவியணியினரை சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்ததுட ன் அத்தியவசிய அல்லாத பதவியணியினர் இருக்குமாயின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணி எண்ண்கையை திருத்துதல் வேண்டும்.